# இந்தியத் துணைத் தூதரகம்
**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

## இந்தியத் துணைத் தூதரக பகுதி நிதிப்பங்களிப்பில்

## யாழ்ப்பாணத்தில் கம்ப இலக்கிய விழா

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ரூபா 300,000.00 நிதிப்பங்களிப்பில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ”யாழ். கம்பன் விழா- 2020” இன் இறுதி நாள் நிகழ்வு மார்ச் 1ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம், நல்லூரில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ், பேராசிரியர் சிவலிங்கராஜா மற்றும் முனைவர் ஆறுதிருமுருகன் ஆகியோர் நீதியரசர்களாக இருக்க **”துறவின் வரம்பு கடந்து இயங்கிய விஸ்வாமித்திரர் குற்றவாளி”** எனும் தலைப்பில் வழக்காடுமன்றம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது, இந்த வழக்காடு மன்றத்தின் வாதிகள் தரப்பில் பிரபல இந்தியப் பேச்சாளர் பேராசிரியர் மு. இராமச்சந்திரனும் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தமிழ்நாடு திரைப்பட இயக்குனரும் சிறந்த பேச்சாளருமாகிய திரு. பாரதி கிருஷ்ணகுமாரும் இரு அணிகளுக்கும் தலைமை தாங்கி விவாதங்களை முன்வைத்தனர்.

அன்றைய தினம் இடம்பெற்ற நிகழ்வில் 500இற்கு மேற்பட்ட தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் நிகழ்வைக் கண்டு களித்தனர். முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அவர்கள் ரூபா 300,000.00 இற்கான காசோலையை அகில இலங்கைக் கம்பன் கழக

செயலாளர் வைத்திய கலாநிதி இரட்ணகுமார் அவர்களிடம் கையளித்தார்.

நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.